05.07.2016

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தாராபுரம் அருகே உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரம்

தாராபுரம், அதனைச் சுற்றியுள்ள கிராம பகுதிகளில் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தாராபுரம் பகுதியில், அமராவதி ஆற்றங்கரையோரமாக ஆண்டு தோறும் கரும்பு சாகுபடி நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு நடவு செய்யப்பட்ட கரும்பு, தற்போது அறுவடை செய்யப்பட்டு அதிலிருந்து உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட கரும்பு இயந்திரத்தில் வைத்து அறைக்கப்பட்டு அதிலிருந்து கரும்புச்சாறு எடுக்கப்படுகிறது. அந்தச் சாறு சுத்தம் செய்யப்பட்டு பெரிய வார்ப்பில் ஊற்றப்பட்டு காய்ச்சப்படுகிறது. நன்கு காய்ச்சப்பட்ட பின்பு அந்தச் சாறு மஞ்சள் நிறத்தில் பாகு நிலைக்கு வரும். அந்தப் பாகு, மற்றொரு பெரிய வார்ப்பில் மாற்றப்படும். அதன்பின்பு தொழிலாளர்கள்

அந்தப் பாகுவை துணியில்வைத்து உருட்டி, உருண்டை வெல்லம் தயாரிக்கின்றனர். அவை 30 கிலோ எடை கொண்ட சிப்பமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கும், தனியார் வெல்ல மண்டிக்கும் அனுப்பப்படுகிறது.

இதுகுறித்து உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அலங்கியம், கீரனூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது: ஒரு ஏக்கரில் கரும்பு நடவு செய்வதற்கு உழவு, நடவு, உரச்செலவு என ரூ.31 ஆயிரம் வரை செலவு ஆகிறது.

கரும்புப் பயிர் அறுவடை செய்வதற்கு 12 மாதங்கள் ஆக வேண்டும். கரும்பு வெட்டுவதற்கு ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடியிலிருந்து ஆள்கள் வருகிறார்கள்.

அவர்களுக்கு, தலா 30 கிலோ எடை கொண்ட 4 சிப்பத்திற்கு ரூ.450 கூலி வழங்கப்படுகிறது.

அதேபோல், வெல்லம் தயாரிக்கும் தொழிலாளர்களுக்கு 4 சிப்பத்திற்கு ரூ.650 கூலியாக வழங்கப்படுகிறது.

தற்போது ஒர் ஏக்கருக்கு 100 சிப்பங்கள் வரை வெல்லம் கிடைக்கிறது. அதற்கு, ஆண்டு முழுவதும் நடவுப் பணியில் இருந்து அறுவடை வரை ரூ.58 ஆயிரம் செலவாகிறது. இந்நிலையில், தற்போது 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ.940 என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.94 ஆயிரம் வரை கிடைக்கும். எனவே, அரசு சிப்பத்திற்கு ரூ. 1,400 என விலை நிர்ணயம் செய்து அறிவித்தால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என்றனர்.

**ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் முருங்கை, சுரைக்காய் விலை சரிவு**

ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தையில் முருங்கைக்காய் மறறும் சுரைக்காய் விலை சரிந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதால், அவற்றின் விலைகள் சரிந்துள்ளன. கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ. 92-க்கு விற்கப்பட்டது. ஆனால், தற்போது ரூ.24-க்கு விற்பனையானது. அதேபோல், ஒரு கிலோ சுரைக்காய் ரூ.18-க்கு விற்பனையானது, இந்த வாரம் கிலோ ரூ.2-க்கு விற்கப்பட்டது.

மற்ற காய்கறிகளின் விலை நிலவரம்: வெண்டைக்காய் கிலோ ரூ. 2, பாகற்காய் ரூ. 20, பூசணிக்காய் ரூ. 9.50, பீட்ரூட் ரு. 16, புஸ்பீன்ஸ் ரூ. 65, டிஸ்கோ கத்திரிக்காய் ஒரு மூட்டை (30 கிலோ) ரூ. 320, 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ரூ. 320,சின்னவெங்காயம் (புதியது) கிலோ ரூ. 28 முதல் ரூ. 36, சின்னவெங்காயம் (பழையது)ரூ. 15 முதல் ரூ. 25-க்கு விற்கப்பட்டது.

## தருமபுரிக்கு 1,200 டன் நெல் அரவைக்காக அனுப்பி வைப்பு

நீடாமங்கலத்திலிருந்து 1,200 டன் சன்ன ரக நெல் அரவைக்காக தருமபுரிக்கு திங்கள்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து 87 லாரிகளில் 1,200 டன் சன்னரக நெல் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு திங்கள்கிழமை கொண்டுவரப்பட்டது.

நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் முன்னிலையில் நெல் மூட்டைகள் அரவைக்காக தருமபுரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## நெல்லை மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு

திருநெல்வேலி மாவட்டத்தில் நிகழ் கார் பருவத்தில் இதுவரை 5 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாபநாசம் அணையின் மூலம் 86,107 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன. நிகழ் கார் பருவம் சாகுபடி செய்வதற்கு பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் முழு வீச்சில் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் 23 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், இதுவரை 5 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து 2 தினங்களுக்கு முன்னர் சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஆழ்வார்குறிச்சி, கடையம், சிவசைலம், கீழஆம்பூர் பகுதியில் விவசாயிகள் சாகுபடி பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது.

அணைகளின் நீர்வரத்து: திங்கள்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 690.39 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 11 கனஅடி, கடனாநதி அணைக்கு 47 கனஅடி, ராமநதி அணைக்கு விநாடிக்கு 26.11 கனஅடி, கருப்பாநதி, குண்டாறு, அடவிநயினார், கொடுமுடியாறு ஆகிய அணைகளுக்கு தலா 5 கனஅடி நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 80.65 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 89.50 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 71.92 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் 57.40 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 64.75 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் 28.87 அடி, குண்டாறு அணை நீர்மட்டம் 32.12 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 63.50 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 21.61 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் 12.43 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 25 அடியாக இருந்தது. பாசனத்துக்கு பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து 1054.75 கனஅடி, மணிமுத்தாறு அணையில் இருந்து 75 கனஅடி, கடனாநதி அணையில் இருந்து 80 கனஅடி, ராமநதி அணையில் இருந்து 40 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தென்னை சாகுபடி குறித்த பயிற்சி**

திண்டிவனம்: மரக்காணம் மற்றும் வானுார் வட்டாரங்களில் தென்னை சாகுபடி செய்துள்ள க0 0  விவசாயிகளுக்கு உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில், பயிற்சி முகாம் நடந்தது.

மரக்காணம் சாலையில் உள்ள திண்டிவனம் வேளாண் துணை இயக்குநர் அலுவலகத்தில் நடந்த முகாமிற்கு விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ரவி பங்கேற்று, சிறப்புரையாற்றினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தார். மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரிய சென்னை அலுவலர் ஜெயபாண்டி, தென்னை வளர்ச்சி வாரிய மண்டல அலுவலர் சுப்ரமணியன், தென்னை வளர்ச்சி வாரிய திட்ட மேலாளர் ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டு, தென்னை சாகுபடி குறித்து பயிற்சி அளித்தனர்.

தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள், அறுவடையின் செயல் நேர்த்தி தொழில் நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல் மற்றும் தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தனர்.

இந்த பயிற்சிக்கான ஏற்பாடுகளை திண்டிவனம் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் சரவணன், மரக்காணம் வட்டார வேளாண்மை அலுவலர் எத்திராஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர். மரக்காணம் வேளாண்மை உதவி அலுவலர் மோகன்குமார் நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 300 மூட்டை பருத்தி ரூ.65 லட்சத்திற்கு ஏலம்

இடைப்பாடி : சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் மூலப்பாதை, பில்லுக்குறி, குப்பனூர், கூடக்கல், புளியம்பட்டி, கள்ளுக்கடை, பக்கநாடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் 300 மூட்டை பருத்தியை கொண்டு வந்தனர். பருத்தியை ஏலம் எடுக்க

ராசிபுரம், நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். நேற்று நடந்த ஏலத்தில் பிடி ரகம் குவிண்டால் ரூ.5,200 முதல் ரூ.5,506 வரை ஏலம் போனது. மொத்தம் 300 மூட்டை பருத்தி ரூ.65 லட்சத்திற்கு விற்பனையானது.

## ஆனி அமாவாசையையொட்டி 193 டன் காய்கறிகள் ரூ.50.65 லட்சத்திற்கு விற்பனை

சேலம் : ஆனி மாத அமாவாசையையொட்டி, சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில் ரூ.50.65 லட்சம் மதிப்பிலான 193 டன் காய்கறிகள் விற்பனையானது. சேலம் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, அஸ்தம்பட்டி, சூரமங்கலம், தாதகாப்பட்டி, ஆட்டையாம்பட்டி, ஆத்தூர், மேட்டூர், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், இளம்பிள்ளை, இடைப்பாடி உள்ளிட்ட 11 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. பண்டிகை நாட்கள் மட்டுமின்றி, மாதந்தோறும் அமாவாசை நாட்களில் விற்பனை இருமடங்கு அதிகரிக்கும்.

நேற்று, ஆனி மாத அமாவாசை என்பதால், உழவர் சந்தைகளில் காய்கறி விற்பனை வழக்கத்தை காட்டிலும் அதிகரித்து காணப்பட்டது. காய்கறி, பழங்கள் உள்பட 76 வகையான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. மொத்தமுள்ள 11 உழவர் சந்தைகளில் 1033 விவசாயிகள் கொண்டு வந்திருந்த, 193 டன் காய்கறிகள், ரூ.50 லட்சத்து 65 ஆயிரத்து 565க்கு விற்பனையானது. இக்காய்கறிகளை 41 ஆயிரத்து 984 நுகர்வோர்கள் வாங்கிச் சென்றனர்.

அதிகபட்சமாக மாநகரில் உள்ள சூரமங்கலம் உழவர் சந்தையில் 221 விவசாயிகள் கொண்டு வந்திருந்த, 43.525 டன் காய்கறிகள் ரூ.11 லட்சத்து 73 ஆயிரத்து 570க்கு விற்பனையானது. இதனை 8 ஆயிரத்து 715 நுகர்வோர்கள் வாங்கிச்சென்றனர். இதேபோல், தாதகாப்பட்டி உழவர் சந்தையில் 157 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 28 டன் காய்கறிகள், ரூ.7 லட்சத்து 83 ஆயிரத்திற்கும், அஸ்தம்பட்டி உழவர் சந்தையில் 70 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 14 டன் காய்கறிகள் ரூ.4

லட்சத்து 26 ஆயிரத்திற்கும், அம்மாப்பேட்டை உழவர் சந்தையில் 110 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 17 டன் காய்கறிகள் ரூ.4 லட்சத்து 55 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

## இயந்திர நெல்நடவு பணி, தட்டு நாற்றுகள் தயார் செய்ய விவசாயிகள் வங்கி கணக்கில் ரூ.4ஆயிரம் நேரடி மானியம்

திருச்சி,: திருச்சி மாவட்டத்தில் நெல்நடவு பணி, தட்டு நாற்றுகள் தயார் செய்ய ரூ.4ஆயிரம் மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கிற்கே நேரடியாக செலுத்தப்பட உள்ளன. திருச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு குறுவை சாகுபடிக்கு பாசன நீர் கிடைக்க பெறாத தாலும் மேட்டூர் அணையின் மிக குறைந்த அளவே தண்ணீர் உள்ள நிலையில் ஆழ்குழாய் கிணறு மற்றும் வடிமுனை குழாய் கொண்டு குறுவை நெற்பயிர் சாகுபடி செய்ய உள்ள டெல்டா விவசாயிகளின் நலனுக்காக குறுவை சாகுபடி சிறப்பு உதவி திட்டம் ரூ.88.55 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் தமிழக அரசு அறிவித்துள்ளது.

குறுவை சாகுபடி சிறப்பு உதவி திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் உள்ள டெல்டா வட்டாரங் களில் வடிமுனை குழாய் மூலம் குறுவை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளுக்கு 1,500 ஏக்கரில் இயந்திர நெல் நடவு செய்ய இலக்கீடுகள் பெறப்பட்டு மாவட்டத்தில் இதுவரை 702 ஏக்கரில் இயந்திரம் மூலம் நடவு செய்வதற்குரிய பாய் நாற்றாங்கால் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது.

மேலும் லால்குடி வட்டாரத்தில், 152 ஏக்கரில் இயந்திரங்களை கொண்டு நெல் நடவு பணி கள் முடிவடைந்துள்ளது. நெல் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கான இயந்திர நெல் நடவு பணிக்காகவும், அதற்குரிய பாய் மற்றும் தட்டு நாற்று களை தயார் செய்வதற்காகவும் ரூ.4ஆயிரம் பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கிற்கே நேரடியாக செலுத்தப்பட உள்ளது.களர் உவர் நிலங்களில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்குரிய 5 கிலோ நுண்சத்து உரம் ரூ.170 முழு மான்யத்தில் 1,500ஏக்கருக்கு வழங்கப்பட உள்ளது.

மேலும் களர் உவர் நிலங்களில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்குரிய 10 கிலோ ஜிங்சல்பேட் உரம் ரூ.400 முழு மான்யத்தில் 4ஆயிரம் ஏக்கருக்கு டெல்டா பகுதி வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்பட உள்ளது.இது குறித்து திருச்சி மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், 2016-17ம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறுவகை திட்டத்தில் மானாவாரி துவரை சாகுபடியில் புதிய உயர் தொழில் நுட்பங்களை கையாண்டு பயறுவகை பயிர்களில் விவசாயிகள் அதிக மகசூல் பெறுவதற்கென மாவட்டத்தில் மானாவரி துவரை சாகுபடி நடை பெறும் முசிறி, தா.பேட்டை, ொதாட்டியம், மண்ணச்சநல்லூர் மற்றும் புள்ளம்பாடி வட்டாரங்களில் 700எக்டரில் துவரை உயர் தொழில் நுட்ப செயல் விளக்கங்கள் அமைக்க இலக்கீடு பெறப்பட்டுள்ளது.

இச்செயல் விளக்கம் அமைக்கும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.5ஆயிரம் வீதம் மான்யத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது. இதில் உயர் விளைச்சல் தரவல்ல கோஆர்ஜி -7 இரக துவரை விதை 5 கிலோ, உயிரியல் கட்டுப்பாட்டு காரணி டி.விரிடி 2.5 கிலோ பயறு வகை நுண்சத்து உரம் 5 கிலோ, திரவ வடிவ உயிர் உரம் ஒரு லிட்டர் ஆகியவை வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக வழங்கப்பட உள்ளது.

2016-17ம் ஆண்டு தேசிய எண்ணெய் வித்து பெருக்க திட்டத்தின் கீழ், 15 ஆண்டுக்குள் வெளியிடப்பட்ட நிலக் கடலை விதைகளுக்கு ஒரு கிலோ விதைக்கு ரூ.25வீதமும், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்-பயறுவகை திட்டத்தின் கீழ் 15 ஆண்டுக்குள் வெளியிடப் பட்ட பயறுவகை விதைகளான உளுந்து, பாசிபயறு, துவரை போன்றவற்றுக்கு ஒரு கிலோ விதைக்கு ரூ.25 வீதமும் மான்யம் வழங்கிட ஆணைகள் பெறப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஊடுபயிருக்கு ரூ.1000 மானியம்**

தேசிய வேளாள் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி பெரு க்க திட்டத்தின் கீழ்,மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் வரிசை விதைப்பு அல்லது விதை ப்பு கருவி கொண்டு நிலக்கடலையுடன் ஊடுபயிராக பயறு வகை பயிர்கள் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.ஆயிரம் வீதம் பின்னேற்பு மானியமாக விவ சாயிகளின் வங்கி கணக்கிற்கே நேரடியாக வழங்கப்பட உள்ளன.

உரங்கள் தயார் திருச்சி மாவட்டத்தில் நடப்பு பருவத்திற்கு தேவையான உரங்கள் யூரியா 6,172 மெ.டன்னும், டிஏபி 1,643 மெ. டன்னும், பொட்டாஷ் 3,282 மெ.டன்னும் மற்றும் கூட்டுரம் 7,209 மெ. டன்னும் திருச்சி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மழை அளவு குறைவு மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 735 மி.மீ. ஜூன் மாதம் முடிய பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 155.18 மி.மீ. இதுவரை பெறப்பட்ட மழை அளவு 151.64 மி.மீ. கடந்த ஆண்டு ஜுன் மாதம் முடிய பெய்த மழையளவு 267.3 மி.மீ. நடப்பாண்டு ஜூன் மாதம் முடிய பெய்ய வேண்டிய சராசரி மழையை விட குறைவாக பெய்துள்ளது.

**மழையை பயன்படுத்தி தென்னைக்கு உரமிட்டால் அதிக மகசூல் பெறலாம் வேளாண் உதவி இயக்குனர் தகவல்**

சேதுபாவாசத்திரம். : தென்னை மரங்களுக்கு இட வேண்டிய உர அளவுகள் குறித்து சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) தயாளன். விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். கடைமடை பகுதிகளில் தற்போது பெய்து வரும் நல்ல மழை தென்னைக்கு உரமிடுவதற்கு ஏற்றதாகும். எனவே மழையை பயன்படுத்தி நாட்டு ரக (நெட்டை ரகம்) தென்னை ஒரு வருட கன்றுக்கு தொழு உரம் 10 கிலோ, யூரியா 325 கிராம், சூப்பர் மற்றும்

பொட்டாஷ் தலா 500 கிராம், வேப்பம்புண்ணாக்கு ஒன்றரை கிலோவும், இரண்டு வருட கன்று ஒன்றுக்கு இரண்டு மடங்காகவும் இவ்வாறு 5 வருட கன்றுகள் வரை வேளாண் அதிகாரிகளின் பரிந்துரைப்படி உரமிட வேண்டும். ரக தென்னைகளுக்கு ஒரு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 15 கிலோ, யூரியா 500 கிராம், சூப்பர் 375 கிராம், பொட்டாஷ் 750 கிராம், வேப்பம்புண்ணாக்கு 1.500 கிலோவும், இரண்டு வருட கன்று ஒன்றுக்கு தொழு உரம் 30கிலோ, யூரியா 1 கிலோ, சூப்பர் 750கிராம், பொட்டாஷ் 1.500 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 2.500கிலோவும் என 4 வருட கன்றுகள் வரை பரிந்துரைப்படி உரமிட வேண்டும்

மேற்கண்ட உர பரிந்துரை அளவினை சம பங்காக பிரித்து வருடத்தில் இரு முறை இட வேண்டும், அதாவது மார்கழி, தை மாதங்களில் ஒரு முறையும், ஆனி, ஆடி மாதங்களில் ஒரு முறையும் இட வேண்டும். 30 முதல் 45 நாட்கள் கழித்து தென்னை நுண் சத்து உரத்தினை மரம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் இட வேண்டும். இவ்வகை உரங்களை மரத்தை சுற்றி 5 அடி தூரத்தில் இட்டு மண்ணை கிளறிவிட்டு உடனடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும், முறையாக உரமிடும் பட்சத்தில் குரும்பை உதிர்தல், ஒல்லிக்காய், காய்களில் வெடிப்பு, நீள வடிவிலான வெற்றுகாய்கள் ஆகிய பிரச்சனைகள் குறைந்து ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 150 முதல் 200 தேங்காய்கள் வரை மகசூல் எடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

## விதை பரிசோதனை நிலையத்தில் வேளாண் மாணவர்களுக்கு தொழில்நுட்ப விளக்க பயிற்சி

தஞ்சை, : தஞ்சாவூர் விதை பரிசோதனை நிலையத்தில் வேளாண் பட்டப் படிப்பு மாணவ, மாணவிகளுக்கு தொழில்நுட்ப விளக்கம் அளிக்கப்பட்டது.தஞ்சை காட்டுத் தோட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கீழ் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை உதவி பேராசிரியர் புனிதவதி தலைமையில் 2ம் ஆண்டு வேளாண் பட்டயப் படிப்பு படிக்கும் 39 மாணவ, மாணவிகள் விதை

உற்பத்தி பாட திட்டத்தில் விதைப் பரிசோதனை நிலைய தொழில்நுட்ப விளக்கம் பெற ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்தனர்.

விதை பரிசோதனை அலுவலர் பிரபாகர் வரவேற்று விதை பரிசோதனை நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் விதைச் சட்டம் 1966ன் நடைமுறைக்குட்பட்டு விதைப் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருவதையும், விதை காப்பகத்தில் காப்பக விதை மாதிரிகள் பாதுகாப்பது குறித்தும் விளக்கமளித்தார். விதை மாதிரி பெறுதல், பதிவு செய்தல் குறித்து வேளாண் அலுவலர் சரசு விளக்கிக் கூறினார். பகுப்பாய்விற்கு மாதிரிகளை பிரித்தல் மற்றும் பூச்சி, நோய் தாக்குதல் கணக்கிடும் குறித்த விவரங்களை வேளாண் அலுவலர் ரெஜினாபேகம் விளக்கம் அளித்தார். நாகை வேளாண் அலுவலர் அமிர்தகுமார் மாணவ, மாணவிகளுக்கு செயல்முறை விளக்கம் அளித்தார்.

முளைப்புத் திறன் பரிசோதனைக்கு தேவையான அனைத்து உபகரணங்கள் பயன்படுத்துவதில் ஆய்வக உதவியாளர் கலியபெருமாள் உதவி செய்தார். உதவியாளர் செல்வராஜ் ஆய்வகத்தை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## தாழக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பெட்டக வசதி

நாகர்கோவில்: தாழக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி தொடக்கவிழா சங்க தலைவர் பகவதிபெருமாள் தலைமையில் நடந்தது. விழாவில் விஜயகுமார் எம்பி தனிநபர் பாதுகாப்பு பெட்டகத்தை திறந்து வைத்து பெட்டக சாவியை 6 வாடிக்கையாளர்களுக்கு வழங்கினார். 6 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.35 லட்சம் கடனுதவி, 8 கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு ரூ.21 லட்சத்து 50 ஆயிரம், 24 உறுப்பினர்களுக்கு மத்திய கால கடனாக ரூ.9 லட்சத்து 25 ஆயிரம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ராஜேந்திரன், நாகர்கோவில் சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் டாக்டர் பிரியதர்சினி, குமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் சம்பத்சந்திரா, குமரி மாவட்ட பால்வளதலைவர் அசோகன் ஆகியோர் பேசினர். சங்க செயலாளர் நாகரெத்தினம் வரவேற்றார். துணை தலைவர் சங்கர் நன்றி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஆண்டிப்பட்டி ஒன்றிய பகுதியில் பன்னீர் திராட்சை விவசாயத்தில் ஆர்வம் காட்டு விவசாயிகள்



கண்டமனூர்,

ஆண்டிப்பட்டி ஒன்றிய பகுதியில் பன்னீர் திராட்சை விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

திராட்சை சாகுபடி

தேனி மாவட்டம் கம்பம், சுருளி, காமயகவுண்டன்பட்டி, நாராயணதேவன்பட்டி, அணைப்பட்டி, ஓடைப்பட்டி ஆகிய பகுதிகளில் பல்வேறு ஏக்கரில் விவசாயிகள் திராட்சை சாகுபடி செய்து வருகிறார்கள். குறுகிய கால பயிரான திராட்சையில் நல்ல மகசூல் கிடைப்பதாலும், விலை சீராக இருப்பதாலும் இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தண்ணீர் வசதியோடு, முறையான பராமரிப்பு இருந்தால் ஒரு ஏக்கருக்கு 8 டன் முதல் 10 டன் வரை விளைச்சலை பெறலாம் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் ஆண்டிப்பட்டி அருகே உள்ள ராஜதானி, சுந்தரராஜபுரம், தெப்பம்பட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் இறவை பாசனம் மூலமும், சொட்டுநீர் பாசனம் மூலமும் பன்னீர் திராட்சை நடவு செய்து இருந்தனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி

தற்போது திராட்சை அறுவடை செய்யும் நிலையில் செவட்டை நோய், கத்தாளை பூச்சி தாக்குதலால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் 8 டன் எடுக்கும் நிலையில் தற்போது 5 டன் மட்டும் விளைச்சலை எடுக்க முடியும் என்ற நிலை உருவாகி உள்ளது. இருந்தாலும் ஒரு கிலோ திராட்சையை 60 ரூபாய்க்கு தோட்டத்திற்கே வந்து வியாபாரிகள் கொள்முதல் செய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதனால் மேலும் பல்வேறு ஏக்கரில் பன்னீர் திராட்சை விவசாயத்தில் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.